பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 18 வியாழக்கிழமை 06.10.2022 கதிர் 222

## கோண்டாவிலில் ரயிலில் மோதி ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம் - கோண்டாவில் பகுதியில் ரயிலுடன் மோதி சம்பவ இடத்திலேயே ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து காங்கேசன்துறை நோக்கிப் பயணித்த தபால் ரயிலுடன் மோதுண்டதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. ☞ 8

## மொட்டுக் கட்சி வசமானது கோப் குழுவின் தலைமை



பொது நிறுவனங்கள் தொடர்பான கோப் குழுவின் புதிய தலைவராக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார நியமிக்கப்பட்டுள்ளார்.

கோப் குழுவின் முதலாவது கூட்டம், நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இன்று நடைபெற்றது.

இதன்போது கோப் குழு ☞ 8

## தந்தையும் இரு மகன்களும் அதிகாலை சுட்டுக்கொலை!




### மினுவாங்கொடையில் பயங்கரம்

கம்பஹா மாவட்டம், மினுவாங்கொடை - கமன்கெதர பகுதியில் உள்ள வீடொன்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இன்று அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், 51 வயதான தந்தை, 24 மற்றும் 23 வயதான அவரது இரண்டு மகன்களுமே உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. ☞ 8

# முரண்பாடுகளை மறந்து சகலரும் ஒன்றுபடுங்கள்



### ஜனாதிபதி ரணில் மீண்டும் அழைப்பு

அண்மைக்கால வரலாற்றில் நாடு எதிர்நோக்கிய பாரிய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்காக பழைய முரண்பாடுகளை மறந்து பொது வேலைத்திட்டத்தில் அனைவரையும் இணையுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளார். ☞ 8

## யாழ். பல்கலையின் பொதுப் பட்டமளிப்பு விழா






யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 36 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது அமர்வு பல்கலைக்கழக வேந்தர் வாழ்நாள் பேராசிரியர் எஸ். பத்மநாதன் தலைமையில் ☞ 8

## 22 ஆவது திருத்தச் சட்டமூலம் மீதான விவாதம் ஒத்திவைப்பு



அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டமூலம் மீதான விவாதம் அடுத்த நாடாளுமன்ற அமர்வின் போது நடைபெறும் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இன்று சபையில் அறிவித்தார்.

22 ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் இன்று விவாதம் ஆரம்பமாக இருந்தது.

இந்நிலையில் சபாநாயகர் தலைமையில் இன்று முற்பகல் நடைபெற்ற கட்சித் ☞ 8

## நாடாளுமன்றத்தை உடன் கலைக்கவும்

### கஜேந்திரகுமார் எம்.பி. கோரிக்கை



பிரதமர், ஜனாதிபதி மற்றும் அமைச்சரவை பதவி விலகிய பின்னர் நாடாளுமன்றத்தில் மக்களின் விருப்பம் பிரதிபலிக்கப்படவில்லை. எனவே, நாடாளுமன்றம் உடனடியாகக் கலைக்கப்பட வேண்டும். ☞ 2

## மின்னல் தாக்கி விவசாயி சாவு!

(ந.லோகதயாளன்)

யாழ்., தெல்லிப்பழையில் மின்னல் தாக்கி விவசாயி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

தெல்லிப்பழையைச் சேர்ந்த 34 வயதுடைய மகாலிங்கம் ராகவன் எனபவரே இவ்வாறு சாவடைந்தார்.

தெல்லிப்பழை - அம்பனைப் பகுதியில் இன்று ☞ 8

## வடக்கில் நில அபகரிப்பை உடன் தடுத்து நிறுத்துங்கள்

### ஜனாதிபதியிடம் கூட்டமைப்பு வேண்டுகோள்



மகாவலி வலயம் என்ற பெயரில் வடக்கில் நிலங்களைத் தந்திரமாக அபகரிக்கும் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட ☞ 3

## பல்கலைக்கழகங்களினுள் அரசியல் தீயை மூட்டாதீர்கள்

### சுரேன் ராகவன் வலியுறுத்து



பல்கலைக்கழகங்களினுள் அரசியல் தீயை மூட்ட வேண்டாம் என்று வலியுறுத்தினார் உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ☞ 2

## கோட்டாவையே விரட்டியடித்த எங்களுக்கு வேந்தரைத் தூக்குவது பெரிய விடயமல்ல



### பேராதனைப் பல்கலையில் அச்சுறுத்தல் என்று இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

பல்கலைக்கழகங்களினுள் அடிப்படைவாதம், பாசிவாதம், பகிடிவதை உள்ளிட்ட பல முறையற்ற செயற்பாடுகள் இடம்பெறும் நிலையில் அவற்றை அனுமதிக்க முடியாது.

- இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்தார். ☞ 2

## கோட்டாவையே.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவே, பல்கலைக்கழக மாணவர்களினதும், விரிவுரையாளர்கள் மற்றும் வேந்தர்களினதும் உரிமையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அதற்கான பொறுப்பு பாதுகாப்பு அமைச்சுக்கு உண்டு என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றை முன்வைத்த போதே இவ்வாறு குறிப்பிட்ட பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மேலும் கூறுகையில்,

நாட்டின் ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்சவையே பதவி விலக்கிய எமக்கு வேந்தரைப் பதவி விலக்குவது பெரிய விடயமல்ல எனப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஒரு பிரிவினர் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர் என்று பேராதனை பல்கலைக்கழக வேந்தர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

பல்கலைக்கழகங்களில் பகிடிவதைக்கு அப்பாற்பட்ட பல கொடுமைகள் இடம்பெறுகின்றன. பல்கலைக் கழகத்துக்குள் அடிப்படைவாதம், பாசிவாதம் உள்ளிட்ட பல முறையற்ற செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. இவற்றை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

ஜனநாயகம் தொடர்பில் பலர் தமக்குச் சாதகமாக வரைவிலக்கணம் செய்து கொள்ளலாம். வீடுகளை எரித்து, வன்முறைச் சம்பவங்களில் ஈடுப்பட்டவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போது அவர்களுக்கு ஒரு மணித்தியாலத்தில் பிணை வழங்கப்பட்டதை கைத்தட்டி வரவேற்றமை ஜனநாயகம் அல்ல.

எனவே, பல்கலைக்கழகங்களினுள் இடம்பெறும் அடிப்படைவாதம், பாசிவாதம், பகிடிவதை உள்ளிட்ட பல முறையற்ற செயற்பாடுகலிலிருந்து பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பல்கலைக்கழக வேந்தர்கள் ஆகியோரின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பு பாதுகாப்பு அமைச்சுக்கு உண்டு. அதற்கான நடவடிக்கையை எடுப்போம் - என்றார்.

## பல்கலைக்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராகவன். பல்கலைக்கழகத்திலோ - வெளியிலோ வன்முறைக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. ஒருவரது மனித உரிமையை விட 99 வீதமானோரின் மனித உரிமை தொடர்பிலேயே கவனம் செலுத்துவோம் என்றும் அவர் கூறினார்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் பகிடிவதை சம்பவங்கள், அது தொடர்பிலான பெற்றோரின் முறைப்பாடுகள் மற்றும் அங்கு இடம்பெற்று வரும் சம்பவங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று எம்.பி க்கள் சிலர் முன்வைத்த கருத்துக்கள் தொடர்பிலேயே இவ்வாறு தெரிவித்த உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன், மேலும் கூறுகையில்,

நாட்டில் 45 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளனர். அதில் ஒரு சிலரது மனித உரிமை பற்றி கவனம் மேற்கொள்வதா அல்லது 99 வீதமானோரின் மனித உரிமை தொடர்பில் கவனம் செலுத்துவதா என்பது தொடர்பில் கற்றவர்கள் நன்கு அறிவர்

அரசியல் நோக்கத்திலும் பல்வேறு நோக்கங்களிலும் ஒருசிலர் பல்கலைக்கழகங்களினுள் செயற்பட்டு வருகின்றனர். தயவு செய்து அங்கு அரசியல் தீயை மூட்ட வேண்டாம் என நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

பேராதனைச்சம்பவங்கள் தொடர்பில் எனக்குப் பெற்றோர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடமிருந்து 600 இற்கும் மேற்பட்ட குறுஞ்செய்திகள் வந்துள்ளன.

மனித உரிமையை நாம் மதிக்கின்றோம். எனினும், குறுகிய நோக்கங்களுக்காகச் செயற்படுபவர்களையும் மற்றும் வன்முறைகளையும் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் - என்றார்.

## நாடாளுமன்றத்தை..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

-இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நிலையியல் கட்டளைகள் திருத்தம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு கட்சியைச் சேர்ந்தவன் என்ற ரீதியில் நாடாளுமன்றத்தைப் பலப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டையே கொண்டுள்ளேன். இதில் குழுமுறைமைகள் பலப்படுத்த வேண்டியது மிகவும் முக்கியமானது.

இந்தக் குழுக்களின் ஊடாகவே முக்கியமான வேலைகளை செயற்படுத்த முடியுமாக இருக்கும்.

நிலையியல் கட்டளை திருத்தங்கள் தொடர்பான விடயங்களில் அதனை நடைமுறை ரீதியில் திருத்த வேண்டும்.

நாடாளுமன்றக் குழுக்கள், நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுக்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையாக இருக்க வேண்டும்.

அத்துடன் நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான நடவடிக்கைகள் தொடர்பில் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே முடிவெடுக்கப்படுகின்றது.

ஒரு வருடமாக நான் அந்தக் கூட்டங்களில் நிராகரிக்கப்பட்டேன். எங்கள்கட்சிசார்பில் இரண்டு உறுப்பினர்கள் உள்ளனர். ஆனால், எங்களுக்கு அந்தக் குழுவில் இடமளிக்கப்பட்டிருக்கவில்லை.

இதேவேளை, நிதி குழுக்கள் மற்றும் சட்டவாக்கம் தொடர்பான குழுக்களில் நாங்கள் அங்கம் வகிக்க வேண்டும்.

அத்துடன் நேர ஒதுக்கீட்டு விடயத்தில் நான் கட்சித் தலைவர். அதன்படி பேசுவதற்கு நேரம் வழங்கப்பட வேண்டும். இதனால் குறைந்தளவு நேரமாவது வழங்க வேண்டும். எங்களின் கட்சிகள் போன்ற சிறிய கட்சிகள் மதிய நேரத்தின் பின்னர் பேசும் போது 12 நிமிடங்களாவது வழங்க வேண்டும்.

இதேவேளை, அரசமைப்பு ரீதியில் நாடாளுமன்றம் முக்கியத்துவம் வாய்ந்த இடமாக உள்ளது. அரசமைப்பு ரீதியில் எந்தவித தடைகளும் இருக்கக் கூடாது.

முன்னைய பிரமரும், ஜனாதிபதியும், அமைச்சரவையும் பதவி விலகிய பின்னர் இந்தச் சபை மக்களின் விருப்பத்தைப் பிரதிபலிக்கவில்லை என்பதைக் கூறிக்கொள்கின்றேன்.

எவ்வாறாயினும் இந்த நாடாளுமன்றம் உடனடியாகக் கலைக்கப்பட வேண்டும். இப்போதும் மக்களின் அந்த விருப்பம் நிராகரிக்கப்படுகின்றது.

இதேவேளை, குருந்தூர்மலை என்பது தமிழ் மக்கள் வழிபாட்டில் ஈடுபடும் ஒரு புராதன இடமாகும். தொல்பொருள் திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சராக இருந்த விதுர விக்கிரமநாயக்க அங்கு அடிக்கல் ஒன்றை நாட்டியிருந்தார்.

அந்த இடத்தைப் பௌத்த விகாரையாக மாற்றுவதற்கு முயற்சித்துள்ளனர். அந்த இடத்தை அழித்துவிட்டு அவ்வாறு விகாரையாக மாற்ற முடியுமா? அதற்கு யார் அனுமதி கொடுத்தது? குறித்த விடயத்தில் நீதிமன்றத்தில் இடைக்காலத் தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொல்பொருள் திணைக்களம் ஓர் இனவாதத் திணைக்களமாகக் காணப்படுகின்றது. தொழிற்படும் விதமும் அப்படித்தான் உள்ளது. பௌத்த மதகுருவும் நீதிமன்ற உத்தரவை மீறியுள்ளார்.

உத்தரவாதம் உரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள போதும், தொடர்ச்சியாக இனவாத நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன - என்றார்.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மீண்டும் முருங்கை மரத்தில்

ராஜபக்ஷக்களின் கெடுபிடி ஆட்சிக்கு – எதேச்சாதிகார நிர்வாகத்திற்கு – எதிராக மக்கள் கிளர்ந்த போது நாட்டை விட்டுத் தப்பி ஓடிப் போக வேண்டியவரானார் நாட்டின் தலைவர்.

அந்த மக்கள் எழுச்சி – கிளர்ச்சி – முடிவுக்கு வந்து, புதிய ஜனாதிபதியும் அரசும் பதவியேற்று மாதங்கள் மூன்று கடக்கும் நிலைமை.

மீண்டும் பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுவது போல காரியங்கள் இடம்பெறுகின்றன. மக்கள் கிளர்ச்சியை ஒட்டி, ஆட்சிப் பீடம் எவற்றைக் கைவிட வேண்டும் என்று பொதுமக்கள் எண்ணினார்களோ – எதிர்பார்த்தார்களோ – அவையெல்லாம் மீளவும் இடம் பெறத் தொடங்கியுள்ளன.

'பழைய குருடி கதவை திறவடி'என்ற பாங்கில் பழையவற்றை நோக்கித்தான் நாடு நகர்வதாகத் தெரிகிறது.

- மக்கள் கிளர்ச்சிக்கு முகம் கொடுக்க முடியாமல் நாட்டை விட்டுத் தப்பி ஓடிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை மீண்டும் அரசியலுக்கு இழுக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தகவல்கள் வெளியாகின்றன.

- கோட்டா ஆட்சி பீடத்தின் சரிவை அடுத்து ஓடித் தப்பி ஒளித்து இருந்த வண. கலகொடஅத்த ஞானசார தேரர் போன்றோர் மீண்டும் பொதுவெளிக்கு வந்து, தமது கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டனர். கோட்டாபய ராஜபக்ஷவை முன்னிறுத்தி 'ஒரே நாடு; ஒரே சட்டம்' செயலணி மூலம் தாங்கள் முன்வைத்த பரிந்துரைகளைப் புதிய அரசு முன்னெடுக்க வேண்டும் என்று அவரே பகிரங்கமாக கூறி பிரச்சாரம் செய்ய தொடங்கி இருக்கின்றார்.

- கோட்டாபய ராஜபக்ஷவினால் நாடாளுமன்றப் பெரும்பான்மையைச் சாதகமாக வைத்து முன்னெடுக்கப்பட்ட 20 ஆவது திருத்த ஏற்பாடுகளை, மீண்டும் மாற்றி பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு புதிய அரசினால் எடுக்கப்பட்ட முடிவுகள் தடுமாறுகின்றன. 19 ஆவது திருத்த ஏற்பாட்டில் கணிசமான விடயங்களை மீண்டும் கொண்டுவர வரும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட 22 ஆவது திருத்த முயற்சி முழுமையாக முறியடிக்கப்படும் சூழல் தென்படுகின்றது. இந்த அரசமைப்புத் திருத்தம் இன்றும் நாளையும் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என முன்னர் அரசுத் தரப்பினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் ஆளும் பொதுஜன பெரமுனவில் இந்தத் திருத்தத்துக்கு எதிராகக் கடும் ஆட்சேபம் கிளப்பப்பட்டமையினால் இதனை நாடாளுமன்றத்திற்குக் கொண்டுவரும் நடவடிக்கையை அடுத்த நாடாளுமன்றக் கூட்டத் தொடருக்கு அரசு தலைமை இப்போதைக்கு ஒத்திவைத்திருப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன.

அரசு தரப்பில் கணிசமான அளவு ஆதரவு இல்லாவிட்டாலும், ஜனாதிபதியின் நிறைவேற்றதிகாரத்தில் கணிசமான அளவை இந்தத் திருத்தம் இல்லாமலாக்குகின்றது என்பதைச் சுட்டிக்காட்டி, அதன் அடிப்படையில் இத்திருத்தத்துக்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவைப் பெற்று, அதை நிறைவேற்ற முயன்றால் என்ன எனக் கருதி அரசு செயற்படுவதாகக் கூறப்படுகிறது. எதிர்க்கட்சி ஆதரவு தருமானால், அரசு தரப்பில் எதிர்ப்பு காட்டும் எம்பிக்களைக் கைவிட்டு, ஏனையோரின் ஆதரவுடன் விடயத்தைத் தொடரலாம் என்று ஆட்சித்தலைமைக்கு ஆலோசனைகள் கூறப்படுகின்றன.

எது, எப்படி என்றாலும் ஒன்று மட்டும் உண்மை. அது வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறுகின்றது என்பதான செய்திதான்.

மீண்டும் ஒரு தடவை ஆக்ரோஷமான எழுச்சிக்கு இப்போக்கு வித்திடும் என்பது மட்டும் நிச்சயம்.

# ஜெனீவாத் தீர்மானத்துக்கு இந்தியாவின் ஆதரவு தேவை!

## நாடு கடந்த தமிழீழ கோரிக்கை

ஜெனீவாவில் முன்வைக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பான பிரேரணையை திருத்தங்களுடன் நிறைவேற்றுவதற்கு இந்தியா ஆதரவளிக்கவேண்டும் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஈழத்தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட சர்வதேச குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறலை உறுதி செய்வதற்காக இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு இந்தியாவும் ஏனைய உறுப்புநாடுகளும் ஆதரவளிக்கவேண்டும் என தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க ஸ்டாலின் வேண்டுகோள் விடுக்கவேண்டும் எனவும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்படவேண்டும். தமிழ்மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதற்காக சர்வதேச அனுசரணையுடனான சர்வஜனவாக்கெடுப்பை நடத்தவேண்டும் என்ற விடயங்களை மனித உரிமை பேரவையின் தீர்மானத்தில் இணைத்து அந்த தீர்மானத்துக்கு ஆதரவளிக்கவேண்டும் என இந்திய மத்திய அரசாங்கத்தை தமிழக முதல்வர் கேட்டுக்கொள்ளவேண்டும் எனவும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பிராந்திய நாடு என்ற அடிப்படையில் – வளர்ந்துவரும்வல்லரசுஎன்றஅடிப்படையில் – யுத்த குற்றங்கள் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் இனப்படுகொலை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்களுக்கு நீதி கிடைப்பதை உறுதி செய்யவேண்டிய தார்மீக கடப்பாடு இந்தியாவிற்குள்ளது– அவ்வாறான நீதிமூலமே இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படமுடியும் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# 70 லட்சம் கொரோனா தடுப்பூசிகள் 31 ஆம் திகதி காலாவதியாகின்றன!

## சுகாதார பிரிவு தகவல்

இலங்கையில் கையிருப்பில் உள்ள பைசர் தடுப்பூசிகள் எதிர்வரும் 31 ஆம் திகதியுடன் காலாவதியாகவுள்ளன என சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, 70 லட்சம் பைசர் தடுப்பூசிகள் இவ்வாறு மாத இறுதியில் காலாவதியாகவுள்ளதாக அந்தப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதால், மக்கள் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதில்லை எனவும் சுகாதாரப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

# வெளிநாட்டு வேலைகளுக்காக பதிவு செய்துள்ளோர் அதிகரிப்பு!

வெளிநாட்டு வேலைகளுக்காக இந்த வருடத்தின் செவ்வாய்க்கிழமை வரையிலான காலப்பகுதியில் 2 லட்சத்து 36 ஆயிரத்து 748 பேர் பதிவு செய்துள்ளனர். வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனு நாணயக்கார தனது ருவிட்டர் பக்கத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

## அடக்குமுறையை.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் வலியுறுத்தினார். நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நிலையியல் கட்டளைகள் திருத்தம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

சட்டக் கல்லூரி மாணவர்களின் பரீட்சையின் போது ஏற்கனவே தமிழ், சிங்கள மொழிகளில் மாணவர்கள் தோற்றுவதற்கு வாய்ப்புகள் இருந்த போதும், இப்போது அது ஆங்கில மொழி மூலம் மாத்திரம் பரீட்சை எழுதும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இது தொடர்பில் நீதி அமைச்சருக்கு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், பிரதம நீதியரசருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும், அதன்படி முடிவெடுக்கப்படும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

இதேவேளை, முல்லைத்தீவில் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரதேசத்துக்குரிய கோட்டாபய கடற்படை முகாம் காணி தொடர்பில் இங்கே குறிப்பிட வேண்டியுள்ளது. அந்த முகாம் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உருவாக்கப்பட்டது. அரச, தனியார் காணிகள் அடங்கலாக 671 ஏக்கர் நிலத்தை அங்கே கடற்படை தம் வசம் வைத்துள்ளது. அங்கு தனியார் காணிகளை விடுவிக்குமாறு மக்கள் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்த போதும், அதற்கு எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை.

அங்கு மக்கள் மற்றும் அரசியல்வாதிகளின் போராட்டங்களால் அங்கு நில அளவை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்ட போதும், கொழும்பில் இருந்து செல்லும் அதிகாரிகளைக் கொண்டு அந்தக் காணிகளை அளந்து கையகப்படுத்த முயற்சிக்கப்படுகின்றது.

இந்த விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேசத்தில் 6 கிராம அலுவல்கள் பிரிவுகளை மீண்டும் மகாவலியுடன் இணைக்கும் முயற்சிகளில் அரசு ஈடுபட்டுள்ளது.

முன்னர் அமைச்சராக இருந்த சமல் ராஜபக்சவுக்கு விடுத்த கோரிக்கைக்கு அமைய அந்த நடவடிக்கைகளை அவர் இடைநிறுத்தியிருந்தார். ஆனால், மீண்டும் அந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

புதிய ஜனாதிபதியை நாடாளுமன்றம் தெரிவு செய்த பின்னர், எங்கள் கட்சியினர் அவரைச் சந்தித்த போது அரசியல் கைதிகளின் விடுதலை, மகாவலி வலய விவகாரம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கூறியிருந்தேன். அப்போது தனது செயலாளருக்கு அது தொடர்பான அறிக்கையை தன்னிடம் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி கூறியிருந்தார்.

ஆனால், எதிர்வரும் நாட்களில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் குறித்த பகுதிகளை மகாவலியுடன் இணைக்க முயற்சிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலைமை, ஸ்தீரமற்ற அரசு போன்ற நெருக்கடி நிலைமைகள் இருக்கையில் வடக்கில் நிலங்களை தந்திரமாக அபகரிக்கும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

இதனால் மகாவலி எல் வலயம் தொடர்பான நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துவதற்கு ஜனாதிபதியும், அவரின் செயலாளரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன், அங்கு பூர்வீகமாக உள்ள மக்களுக்கு அவற்றை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அணு ஆயுதங்களைத் தாங்கிச் செல்லவல்ல ஏவுகணையைப் பரிசோதித்தது வடகொரியா



## ஜப்பான் மற்றும் தென்கொரியாவுக்கு எச்சரிக்கை

சியோல், ஒக்.06

வட கொரியா கடந்த 5 ஆண்டுகளில் முதல் முறையாக ஜப்பான் மீது கடந்த செவ்வாய்க்கிழமை ஏவுகணையை ஏவியது. வடகொரியா பரிசோதித்த ஏவுகணை பசிபிக் பெருங்கடலில் விழுவதற்கு முன்பு ஜப்பான் எல்லைக்கு மேலே பறந்து சென்றது. இதைத் தொடர்ந்து ஜப்பான் அரசு தனது நாட்டுமக் களை பாதுகாப்பாக இருக்குமாறு எச்சரித்தது. 2017 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஜப்பானுக்கு மேல் பறந்த முதல் வட கொரிய ஏவுகணை இதுவென கூறப்படு கின்றது. இதற்கு பதிலடியாக அமெரிக்காவுடன் இணைந்து தென்கொரியா இன்று ஏவுகணை சோதனை நடத்தியது. வடகொரியாவுக்கு பதி லடியாக இந்த சோதனையில் அமெரிக்க இராணுவம் தங்களுக்கு சொந்தமான 4 ஏவுகணைகளை ஏவி சோதனை நடத்தியமையுடன், தென்கொரிய இராணுவமும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 2 ஏவுகணைகளை ஏவி சோதனை நடத்தியது.

இந்த நிலையில், வடகொரியா இன்று அதிகாலை அணு ஆயுதத்தை சுமந்து செல்லும் வல்லமை கொண்ட பாலிஸ்டிக் ஏவுகணையை சோதனை செய்தது. வடகொரியாவில் இருந்து ஏவப்பட்ட அந்த ஏவுகணை ஜப்பான், தென்கொரியாவை நோக்கி கிழக்கு கடற்பகுதியில் வான்பரப்பை கடந்து சென்று பசுபிக்கடலில்விழுந்துள்ளது. இதனைதென்கொரிய கூட்டு இராணுவ படை உறுதி செய்துள்ளது.

# ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டத்தை ஆதரித்து தலைமுடியை வெட்டிய சுவீடன் பெண் எம்.பி.



பெல்ஜியம், ஒக்.06

ஈரான் நாட்டில் நடைபெறும் ஹிஜாப் எதிர்ப்பு போராட்டத்திற்கு ஆதரவாக சுவீடன் பெண எம்.பி. ஒருவர் தனது தலைமுடியை வெட்டிய சம்பவம் நிகழ்ந்துள்ளது. ஈரானில் போராடும் பெண்க ளுடனான தனது ஒற்றுமையை வெளிப்படுத்தும் வகையில் நாடாளுமன்றவிவாதத்தின் போது ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனது தலைமுடியைக் கத்தரித்துக் கொண்டார்.

தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றிய விவாதத்தில் உரையாற்றியசுவீடன்நாடாளுமன்றஉறுப்பினர் அபிர் அல் சஹ்லானி, ஈரானில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான அனைத்து வன்முறை களையும் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று ஐரோப்பியஒன்றியத்தின்குடிமக்கள்அனைவரும் கோருகிறோம் என்று தெரிவித்தார்.

இஸ்லாமிய மத சட்டங்களை கடுமையாக பின்பற்றி வரும் ஈரானில் பெண்கள் மற்றும் 9 வயதிற்கு மேற்பட்ட சிறுமிகள் இஸ்லாமிய மத உடையான ஹிஜாப் அணிவது கட்டாயமாக் கப்பட்டுள்ளது

அந்த நெருக்குவாரத்துக்கு எதிராக ஈரான் முழுவதும் பெண்கள் போராட்டத்தில் குதித்தனர். ஹிஜாப்பை கழற்றி வீசியும், ஹிஜாப்பை தீ வைத்து எரித்தும் அங்கு பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது தெரிந்ததே.

# மசகு எண்ணெயின் உற்பத்தியை குறைக்க ‘ஒபெக்’ நாடுகள் முடிவு

## அதனால் எரிபொருள்களின் விலை உயரலாம்



பிராங்பர்ட், ஒக்.06

அதிக பணவீக்கம் மற்றும் உக்ரைன்விவகாரம்உள்ளிட்ட சர்வதேச பிரச்சினைகளால் அமெரிக்கா மற்றும் ஐரோப் பாவில் பொருளாதார மந்த நிலை ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாக மசகு எண்ணெய் வர்த்தகம் பாதிக்கப்பட்டு உள் ளது. இதனால் எண்ணெய் விலையை அதிகரிக்கும் நோக்கில் பெட்ரோலிய உற் பத்தி, ஏற்றுமதி நாடுகள் (ஒபெக் நாடுகள்) மசகு எண்ணெய் உற்பத்தியை குறைக்க முடிவு செய்துள்ளன. இந்த நாடுகளின் அமைச்சர்கள் வியன்னாவில் கூடி இந்த முடிவை எடுத்து உள்ளனர்.

அதன்படி நாளொன்றுக்கு 20 லட்சம் பீப்பாய் அளவுக்கு உற்பத்தியைக் குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நடவடிக்கை நவம்பர் முதல் நடைமுறைக்கு வருவதாக அந்தநாடுகள்அறிவித்துள்ளன. உலகப் பொருளாதாரம் மற்றும் எண்ணெய் சந்தை கண் ணோட்டங்களை சுற்றியுள்ள நிச்சயமற்ற தன்மையைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவை கூறியுள்ளன.

மசகு எண்ணெய் உற்பத்தி யை குறைக்க முடிவு செய்தி ருப்பதால், சர்வதேச அளவில் பெற்றோல் மற்றும் டீசல் விலை உயரும் அபாயம் ஏற்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சி.என்.என். ஊடகம் மீது ட்ரம்ப் அவதூறு வழக்கு!

## 475 மில்லியன் டொலர் நஷ்டஈடு கோரி!

புளோரிடா, ஒக்.06


அமெரிக்காவின் முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் சி.என்.என். செய்தித் தளத்தின் மீது 475 மில்லியன் டொலர் நஷ்டஈடு கோரி வழக்கு தொடர்ந்துள்ளார். தனது அரசியல் எதிர்காலத்தை பாழாக்கும் முயற்சியாக சி.என்.என். தொலைக் காட்சி, தனக்கு எதிரான அவதூறு செய்திகளை பரப்பியதாகக் குற்றம் சாட்டியே இந்த வழக்கை அவர் தொடர்ந்துள்ளார்.

புளோரிடாவின் ஃபோர்ட் லாடர்டேலில் உள்ள அமெரிக்க மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில், 2020 ஆம் ஆண்டு அதிபர்த் தேர்தலில் தன்னைப் பற்றி பரப்பட்ட அவதூறு செய்திகள் காரணமாக தான் அதிபர் தேர்தலில் தோற்க நேர்ந்ததாக அவர் குறிப்பிட் டுள்ளார்.



முன்னாள் அதிபர் ட்ரம்ப் தாக்கல் செய்துள்ள வழக்கில், சி.என்.என். தொலைகாட்சி, ட்ரம்பை குறிக்கும் வகையில், The Big Lie என்ற ஒரு சொற்றொடரை, 7,700 முறைக்கும் அதிகமாக பயன்படுத்தியுள்ளது எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது

”இந்தச் சொற்றொடர், மக்களிடம் தவறனா பிம்பத்தை ஏற்படுத்துவதற்கும், மக்களை தூண்டுவதற்குமான நோக்கம் கொண்டது, என்று அவர் தனது குற்றச்சாட்டில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ராணுவத்தில் சேருமாறு அழுத்தம்: ரஷ்ய நாட்டுப் பாடகர் தற்கொலை

மொஸ்கோ, ஒக்.06


உக்ரைன் நாட்டின் மீதான போரில் ரஷ்யஈராணுவத்துடன் இணைந்து சண்டையிட சுமார் 3 லட்சம் ரஷ்யர்களை அணிதிரட்ட அந்த நாட்டின் அதிபர் புடின் சமீபத்தில் உத்தரவு பிறப்பித்தார். மேலும், போரில் பங்கேற்க யாரும் கட்டாயப் படுத்தப்படமாட்டார்கள் என ரஷ்ய இராணுவம் கூறிய நிலை யில், அதற்கு மாறாக இராணுவத்தில் சேர ரஷ்ய ஆண்களுக்கு பல்வேறு வழிகளில் அழுத்தம் கொடுக்கப்படுவதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இந்த நிலையில் உக்ரைன் போரில் பங்கேற்க வற்புறுத்தியதால் ரஷ்ய ராப் பாடகர் ஒருவர் மாடியில் இருந்து குதித்து உயிரை மாய்த்து கொண்ட சம்பவம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இவான் விட்ட லிவிச் பெடுனின் என்கிற 27 வயதான ராப் பாடகர் ரஷ்ய இராணுவத்தில் பணியாற்றிய அனுபவம் உள்ளது. இதனால் அவரை உக்ரைனில் போரில் இணைக்க ரஷ்ய இராணுவம் அழுத்தம் கொடுத்துள்ளது.

அவர் தனக்கு மனநலப் பிரச்சினை இருப்பதாக கூறி இராணுவத்தின் அழைப்பை நிராகரிக்க முயற்சித்தார். ஆனால் இராணுவம் அதை மறுத்துவிட்டது. இதனால்விரக்தியடைந்த அவர் தான் வசித்து வந்த அடுக்குமாடி குடியிருப்பின் 10 ஆவது மாடியில் இருந்து குதித்துத் தற்கொலை செய்து கொண்டார்.

தற்கொலைக்கு முன்பாக அவர் வெளியிட்ட வீடியோ ஒன்றில், இந்த வீடியோவை நீங்கள் பார்க்கும்போது நான் உயிருடன் இருக்க மாட்டேன். கொலைப் பாவத்தை என் ஆன்மா சுமக்க முடியாது, நான் விரும்பவில்லை. எந்த லட்சியத்துக்காகவும் கொலை செய்ய நான் தயாராக இல்லை – எனக் கூறியிருந்தார்.

# வட கொரியாவின் ஏவுகணை வீச்சுக்கு இந்தியாவும் கடும் கண்டனம் தெரிவிப்பு

## பாதுகாப்பு கவுன்ஸிலில் அமெ., இங்கிலாந்து, பிரான்ஸுடன் கூட்டறிக்கை



நியூயோர்க், ஒக்.06

வட கொரியாவின் ஏவுகணை சோதனைகளுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்திருக்கின்றது.

அமெரிக்கா மற்றும் தென்கொரியாவின் கடற்படைகள் கொரிய எல்லையில் கூட்டுப்போர் பயிற்சியில் ஈடுபட்டுள்ள நிலையில், இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக வடகொரியா ஏவுகணையை ஏவி அச்சுறுத்தி வருகிறது. ஜப்பான் கடற்பகுதியில் மீது கடந்த முதலாம் திகதி (சனிக்கிழமை) 2 பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஏவி வட கொரியா ஏவுகணை சோதனை நடத்தியது. இதற்கு உலக நாடுகள் பலவும் கண்டனம் தெரிவித்தன.

இந்தச் சூழலில் கடந்த செவ்வாய்க் கிழமை காலை மீண்டும் ஜப்பான் மீது வடகொரியா ஏவுகணை வீசியுள்ளது. இது இது பசிபிக் பெருங்கடலில் விழுவதற்கு முன்பு ஜப்பானின் தோஹோகு பகுதியில் 1,000 கிலோமீட்டர் உயரத்தில் 20 நிமிடங்கள் பறந்து சென்றதாக ஜப்பானிய அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும், ஏவுகணை பறந்த நேரத்தில் வடக்கு ஜப்பானில் ரயில் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

ஜப்பான் நாட்டின் வான்வெளியில் பறந்த வடகொரிய ஏவுகணையால் பாதிப்பை தவிர்க்கும் பொருட்டு அங்குள்ள மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தனர்.

வட கொரியா கடந்த 5 ஆண்டுகளில் முதல் முறையாக ஜப்பான் பரப்பின் மீதாகக் கடந்த செவ்வாய்க்கிழமை ஏவுகணையை ஏவியது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் வட கொரியாவின் ஏவுகணை சோதனைகளுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன், ஜப்பான் பிரதமர் புமியோகிஷிடாவுடன்தொலைபேசியில்உரையாடினார் எனத் தகவல் தெரிவிக்கப்பட்டது. மேலும், அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் நாடுகள் வட கொரியாவின் ஏவுகணை சோதனைகளுக்கு கண்டனம் தெரிவித்தன. இந்நிலையில் இந்தியாவும் கண்டனம் தெரிவித்தது.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் ஐ.நா. வுக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி ருசிரா கம்போஜ் நேற்று பேசுகையில் -

இந்த ஏவுதல்கள் அந்த பிராந்தியத்திலும் வெளி உலகிலும் அமைதி மற்றும் பாதுகாப்பை பாதிக்கிறது என்று கண்டனம் தெரிவித்தார்.

முன்னதாக, செவ்வாய்க்கிழமை அன்று ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் அமெரிக்கா, இங்கிலாந்து, அல்பேனியா, பிரேசில், பிரான்ஸ், இந்தியா, அயர்லாந்து, ஜப்பான், நோர்வே, தென் கொரியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளின் சார்பில் ஐ.நா. சபைக்கான அமெரிக்க தூதர் லிண்டா தாமஸ்-கிரீன்பீல்ட் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், வடகொரியா இன்று அதிகாலை அணு ஆயுதத்தைச் சுமந்து செல்லும் வல்லமை கொண்ட பாலிஸ்டிக் ஏவுகணையை சோதனை செய்தது குறிப்பிடத்தக்கது.

## பழுதுபட்ட உணவைச் சாப்பிட்டமையால் காப்பகத்தின் மூன்று குழந்தைகள் சாவு!

### திருப்பூரில் பரிதாபச் சம்பவம்

திருப்பூர், ஒக்.06

திருப்பூர் தனியார் குழந்தை காப்பகத்தில் கெட்டுப்போன உணவைச் சாப்பிட்ட 3 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர்.

திருப்பூர் அருகே திருமுருகன்பூண்டியில் அவிநாசி சாலை பூண்டி ரிங்ரோட்டில் உள்ள விவேகானந்தா சேவாலயம் குழந்தைகள் காப்பகத்தில் கெட்டுப்போன உணவை உண்ட குழந்தைகளுக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட குழந்தைகள் திருப்பூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில், 3 குழந்தைகள் உயிரிழந்தன எனத் தகவல் வெளியாகியுள்ளது. உடல்நிலை பாதிக்கப்பட்ட மேலும் 5 பேர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக பொலிஸ் தற்போது விசாரணை நடத்தி வருகின்றனர்.

## உத்தர்காசி பனிச்சரிவில் இன்னமும் 29 பேர் சிக்கியுள்ளனர் எனத் தகவல்

### மீட்கும் நடவடிக்கைகள் தீவிரமாகத் தொடர்கின்றன

டேராடூன், ஒக்.06

இமயமலையின் மலைச் சிகரத்தில் நேர்ந்த பனிச் சரிவில் 29 பேர் இன்னும் சிக்கியுள்ளனர் என இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



அவர்களை மீட்கும் பணியில் தேசிய பேரிடர் மீட்புக்குழுவினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். ஹெலிக்கொப்டர்களும் ஈடுபடுத்தப்பட்டு மீட்புப்பணி முழுவீச்சில் நடைபெறுகிறது.

உத்தரகாண்ட் மாநிலம் உத்தர்காசி மாவட்டத்தில் நேரு மலையேறுதல் நிறுவனம் என்ற அரசு மலையேறுதல் கல்வி பயிற்சி நிறுவனம் உள்ளது. இந்த பயிற்சி நிறுவனத்தை 34 பயிற்சி மலையேறு வீரர்கள் மற்றும் 7 பயிற்சியாளர்கள் என மொத்தம் 41 உத்தர்காசியில் உள்ள இமயமலையின் திரவுபதி கா கண்டா - 2 சிகரத்தில் இருந்து பயிற்சியை முடித்துக்கொண்டு முகாமிற்கு திரும்பிக்கொண்டிருந்தனர். அப்போது, மலைச்சிகரத்தின் 16 ஆயிரம் அடி உயரத்தில் இருந்து முகாமிற்குதிரும்பிக்கொண்டிருந்தபோது திடீரென பனிச்சரிவு ஏற்பட்டது. கடந்த செவ்வாய்க்கிழமை அன்று நிகழ்ந்த இந்த பனிச்சரிவில் மலையேற்ற வீரர்கள் அனைவரும் சிக்கிக் கொண்டனர்.

தகவலறிந்த இந்தோ-தீபெத் எல்லைப்பாதுகாப்பு படையினர், தேசிய, மாநில பேரிடர் மீட்புக்குழுவினர் பனிச்சரிவில் சிக்கியவர்களை மீட்டும் பணியில் களமிறங்கினர். மீட்பு பணியின் போது பனிச்சரிவில் சிக்கிய பலர் உயிருடன் மீட்கப்பட்டனர். ஆனால், இந்த பனிச்சரிவில் சிக்கி 10 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 29 பேர் இன்னும் பனிச்சரிவில் சிக்கியுள்ளனர் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பனிச்சரிவில் சிக்கிய எஞ்சியோரை மீட்கும் பணியில் தேசிய பேரிடர் மீட்புக்குழுவினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். ஹெலிக்கொப்டர்களும் ஈடுபடுத்தப்பட்டு மீட்புப்பணி முழுவீச்சில் நடைபெறுகிறது.

இந்நிலையில் உத்தரகாண்ட் பனிச்சரிவில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் நடவடிக்கைகளுக்கு உதவ குல்மார்க்கிலிருந்து நிபுணர் குழு விரைந்துள்ளது. இதற்கிடையே, வானிலை ஆய்வு மையத்தின் மழை மற்றும் பனி எச்சரிக்கை காரணமாக, உத்தரகாசி மாவட்டத்தில் மலையேற்றம் மற்றும் மலையேறுதல் நடவடிக்கைகள் அடுத்த மூன்று நாள்களுக்கு தடை செய்யப்பட்டுள்ளன.

## ராகுலின் யாத்திரையில் சோனியா

பெங்களூரு, இந்திய ஒற்றுமை பயணம் என்ற பெயரில் ராகுல்காந்தி பாதயாத்திரை நடத்தி வருகிறார். தமிழ்நாடு கன்னியாகுமரியில் தொடங்கிய பாதயாத்திரை கேரளாவை நிறைவு செய்து விட்டது. தற்போது கர்நாடகத்தில் பாதயாத்திரை நடந்து வருகிறது. தசரா, விஜயதசமி பண்டிகை காரணமாக நேற்று முன்தினமும், நேற்றும் 2 நாள்கள் ராகுல்காந்தி ஓய்வெடுத்தார்.

பின்னர் இன்று மண்டியா மாவட்டம் பாண்டவபுராவில் இருந்து ராகுல்காந்தி தனது பாதயாத்திரையை மீண்டும் தொடங்கினார். இந்நிலையில் ராகுல் காந்தியின் 'இந்திய ஒற்றுமை பயணம்' பாதயாத்திரையில் சோனியா காந்தியும் பங்கேற்றுள்ளார். உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் கடந்த சில ஆண்டுகளாகவே தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள் உள்ளிட்ட பொது நிகழ்ச்சிகள் எதிலும் சோனியா காந்தி கலந்து கொள்ளாமல் இருந்து வந்தார். இந்த நிலையில் நீண்ட ஆண்டுகளுக்குப் பிறகு அவர் மிகப்பெரிய ஒரு பொது நிகழ்ச்சியாக இந்த பாத யாத்திரையில் கலந்து கொண்டுள்ளார். இது காங்கிரஸ் கட்சி தொண்டர்களிடையே உற்சாகத்தை ஏற்படுத்தி உள்ளது.



# கல்முனையில் காணாமல் போன 4 மீனவரையும் தேடி நடவடிக்கை

(நூருல் ஹுதா உமர், பாறுக் ஷிஹான்)

கல்முனை பிரதேசத்திலிருந்து 11 நாள்களுக்கு முன்னர் மீன்பிடிப்பதற்காகக் கடலுக்கு தொழிலுக்கு சென்று காணாமல் போன நான்கு மீனவர்களை தேடும் நடவடிக்கையில் காலம் தாமதிக்காது ஈடுபடுமாறு கடற்றொழில் அமைச்சு மற்றும் திணைக்களம், இலங்கைக் கடற்படை, இந்தியக் கரையோரக் காவல்படை என்பனவற்றின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தாம் கொழும்பில் சந்தித்து கலந்துரையாடி வற்புறுத்தியுள்ளார் என அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்துள்ளார்.


இதனடிப்படையில் மீனவர்களைத் தேடும் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. அவர்களைத் தேடிக் கண்டு பிடித்து பாதுகாப்பாக கரைக்கு அழைத்துவர கடற்றொழில் அமைச்சு மற்றும் திணைக்கள அதிகாரிகள், இலங்கை கடற்படையுடன் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட கடற்பரப்பில் இருந்து கடந்த 26.09.2022 அன்று மாலை புறப்பட்டு சென்ற 4 மீனவர்கள் குறித்து இதுவரை எந்த தகவலும் கிடைக்கவில்லை.

இந்த விடயத்தை சம்பந்தப்பட்ட தரப்பினரின் கவனத்திற்கு மீனவ சங்கத்தினர் கொண்டுவந்திருந்த போதிலும் தேடுதல் நடவடிக்கை மந்த கதியில் இடம்பெற்று வருவதாக காணாமல் போன படகு உரிமையாளரினால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

கடலுக்கு சென்று காணாமல் போன மீனவர்களின் குடும்பத்திற்கு தற்காலிகமாவது வாழ்வாதாரத்தை கொண்டு செல்வதற்கு ஏதாவது கொடுப்பனவையோ அல்லது நஷ்டஈட்டையோ பெற்றுக்கொடுக்க சம்பந்தப்பட்ட தரப்பினர் எவரும் இதுவரை முன்வரவில்லை. எனினும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சட்டத்தரணி றொான் அக்தர் இது தொடர்பில் சில நடவடிக்கை எடுத்து வருகின்றார். கல்முனையை சேர்ந்த எம்.ஐ.எம் மஜிட் (வயது 55), சி.எஸ்.எச்.எம் நிப்றாஸ் (வயது 36) , ஏ.பி கபீர் (வயது 50), எம்.என். ஹில்மி (வயது 33),ஆகிய மீனவர்களே காணாமல் போய் உள்ளனர்.

## இயந்திரத்துடன் இணைந்த படகு சாய்ந்தமருதில் கரை ஒதுங்கியது






(பாறுக் ஷிஹான்)

இயந்திரத்துடன் இணைந்த படகு ஒன்று நேற்று (புதன் கிழமை) மாலை மீட்கப்பட்டு, சாய்ந்தமருது கடற்கரைப்பகுதிக் கரைக்கு இழுத்து வரப் பட்டுள்ளது.

இந்தப் படகு பாலமுனைக் கடற் பகுதியில் அநாதரவாக காணப்பட்டதை அந்தக் கடல் பகுதியில் தொழில் செய்து வரும் மீனவர் ஒருவர் அவதானித்து அது குறித்துப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

சாய்ந்தமருது பொலிஸ் குழுவினர் படகு குறித்து விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்தப் படகில் மீனவர்களோஎந்தவிதகடற்சாதனங்களோ இருக்கவில்லை.

இதே வேளை கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட கடற்பரப்பில் இருந்து கடந்த 26 ஆம் திகதியன்று மாலை புறப்பட்டு சென்ற 4 மீனவர்கள் 11 நாள்கள் ஆகியும் அவர்கள் குறித்து இதுவரை எந்த தகவலும் வெளியாகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கல்முனை விகாராதிபதியின் பிணைக்கு நின்றவர்களின் வீடுகளின் மீது தாக்குதல்





(காரைதீவு நிருபர் சகா)

சிறுவர் துஷ்பிரயோக குற்றசாட்டில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த கல்முனை சுபத்ரா ராமய விகாரையின் விகாராதிபதி ரன்முத்துகல சங்கரத்ன தேரர் பிணையில் வருவதற்கு பொறுப்பு நின்றவர்களின் வீடுகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

தேரருக்கு கல்முனை நீதிவான் நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை பிணை வழங்கியது.

இருப்பினும் அதற்கான ஆவணங்களை சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டார்.3தனித்தனிவழக்குகளுக்கான தலா 3 பேரின் 5 லட்சம் ரூபா பெறுமதியான 9 பேரின் சரீர பிணையில் அவர் செவ்வாய்க்கிழமை காலை விடுதலை செய்யப்பட்டார்.

பிணைக்கு ஒப்பமிடுவதில் ஏற்பாட்டாளராக இருந்து செயற்பட்டு ஒப்பமிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரன் ராஜன் சிறைச் சாலைக்கு சென்று அவரை அழைத்து வந்து விகாரையில் உள்ள பொலிஸாரிடம் ஒப்ப டைத்தார்.

நேற்றுமுன்தினம் மாலை அப்பகுதியிலுள்ள வீடுகளில் இடம்பெற்றவாணிவிழாபூஜைகளிலும் அவர் கலந்து கொண்டுள்ளார். அன்றிரவு நடுநிசி 12 மணியளவில் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

அத்தருணத்தில் அந்த மக்கள் 119 அவசர பொலிஸ் பிரிவுக்கு அதிகாலை வரை அறிவித்தும் மறுநாள் பகல் வரை யாரும் அங்கு வரவில்லை என்று உறுப்பினர் ராஜன் தெரிவித்தார்.

விகாராதிபதி நேற்றைய தினம் விகாரைக்கு திரும்பி இருந்த நிலையில், விகாராதிபதி பிணைக்காக கையொப்பம் இட்டவர்கள் 2 பேரின் வீட்டின் மீது நேற்றுமுன்தினம்(4 ஆம் திகதி)இரவு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கல்முனை 01 3 பகுதியில் அமைந்துள்ள சிங்கள பகுதியில் உள்ள முஸ்லிம் குடியேற்ற தொடர்மாடி குடியிருப்பு பகுதிக்கு முன்னால் உள்ள 2 பேரின் வீட்டின் மீதே வாள் மற்றும் கற்களால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மயில்வாகனம் முத்துலெட்சுமி மற்றும் ஹர்சன் டி சில்வா ஆகியோரின் வீடுகளே சேதமாக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட மக்கள் கல்முனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் புலனாய்வு பிரிவினருக்கும் அறிவித்தார்.

அதன்படி நேற்று புதன்கிழமை பகல் பொலிஸார் வந்து விசாரணை நடத்தினர்.

குறித்த விகாரையில் 3 சிறுவர்களான தேரர்கள் மீது பாலியல் ரீதியில் துஷ்பிரயோகத்துக்குள்ளாகினர் என்று கூறப்படும் விடயத்தை ஒட்டி சமூக வலைதளங்களில் மாற்று தரப்பினரால் பேசப்பட்டு வரும் நிலையில், இந்தத் தாக்குதல் சம்பவம் நடந்துள்ளது.

அதே வேளை, விகாராதிபதி பிணை மனுவை எதிர்த்து கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸாருடன் பத்துக்கும் மேற்பட்ட சட்டத்தரணிகளை கொண்ட குழு வாதங்களை முன் வைத்திருந்த நிலையில், விகாராதிபதிக்கு நீதிமன்றம் பிணை வழங்கியது.

ஏற்கனவே, இந்த சிறுவர் தேரர்கள் அம்பாறை பகுதியில் இருந்த விகாரை ஒன்றின் தேரர் ஒருவரினால் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டிருந்த நிலையிலேயே அவர்கள் கல்முனை விகாரையில் இணைக்கப்பட்டு இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்முனை விகாராதிபதி கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம் தொடர்பில் உறுப்பினர் ராஜனுடன் உண்ணாவிரதம் இருந்து, கல்முனை தமிழ் மக்களுக்கு ஆதரவாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்குப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் வாணி விழா

(பைஸல் இஸ்மாயில்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நவராத்திரி விழாவின் இறுதிநாள் விழாவும், ஏடுதொடங்கிவைக்கும்நிகழ்வும் நேற்று மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதம கணக்காளர் ச.நேசராஜா கலந்துகொண்டு சிறப்பித்தார்.

திருகோணமலை ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ சாந்தமூர்த்தி குருக்களினால் நவராத்திரியின் இறுநாள் விடே பூஜை வழிபாடுகள் இடம்பெற்றமையை அடுத்து, மாகாண கல்வி அமைச்சின் பிரதம கணக்காளர் ச.நேசராஜா மற்றும் மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் (திருமதி) சரண்யா சுதர்சன் ஆகியோரினால் ஏடு தொடங்கி வைக்கப்பட்டு, அச்சிறுவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வின்போது, இரட்ணம் சஞ்சு, சியாமலி சகோதரிகளின் வீணை இசையும், திருகோணமலை ஆனந்த பிரகதீஸ்வரா கலாலய மாணவர்களின் நடனமும் நிகழ்ச்சியும் இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

இதில் திணைக்களத்தின் காலாச்சார உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.





# சர்வதேசத்திலிருந்து தனிமைப்படுத்துகின்ற செயற்பாட்டை அரசாங்கம் நிறுத்தவேண்டும்!

## பாக்கீர் மாக்கார் வேண்டுகோள்



உலக நாடுகள் அனைத்தும் எமது நாடு தொடர்பில் மிகுந்த அவதானம் செலுத்தி வரும் நிலையில், ஜனநாயக நாடுகள் மத்தியில் இலங்கையை தனிமைப் படுத்தும் செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுப் பதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற நிலையியற் கட்டளைதிருத்தம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

கடந்த காலங்களில் நாங்கள் பல்கலைக்கழக மாணவர்களாக இருந்தபோது பல்வேறு ஜனநாயக விரோத செயல்களுக்கு எதிராக அன்று இருந்த அரசாங்கங்களுக்கு எதிராக வீதிக்கிறங்கி போராட்டம் செய்திருக்கின்றோம்.

எமது மூதாதையர்களும் அவர்களது உரிமை களுக்காகப் போராடி இருக்கின்றனர். ஆனால், அப் போது இருந்த அரசாங்கங்கள் பேராட்டக்காரர்களுக்கு புனர்வாழ்வளிக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

எமது நாட்டில் புனர்வாழ்வளிக்கும் முறை இருக் கின்றது. சிறிய குற்றங்களுக்கு குற்றவாளியாக் கப்பட்டால், நீதிமன்ற உத்தரவுக்கமைய, அவர்கள் புனர்வாழ்வளிக்கப்படுவார்கள். ஆனால், இன்று போராட்டக்காரர்களுக்கு புனர்வாழ்வளிக்க அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது. இந்த தீர்மானத்தை யார் எடுப்பது? பாதுகாப்பு அமைச்சரா அல்லது செயலாளரா என கேட்கின்றேன். புனர்வாழ்வளிப்பதற்கான அளவுகோல் என்ன? அதனைத் தீர்மானிப்பது யார்?

மேலும், உலக நாடுகள் அனைத்தும் இலங்கை தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் செயற்பட்டு வரு கின்றன. இத்தகைய சூழ்நிலையில் ஜனநாயகத் துக்கு சவால் விடும் செயற்பாடுகளை அரசாங்கம் கைவிடுவது முக்கியமாகும். அதேவேளை, நாட்டு மக் களை மேலும் நெருக்கடி நிலைக்குத் தள்ளும் செயற் பாடுகளையும் அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும்.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான வாக்கெடுப்பு இன்று (வியாழக்கிழமை) நடைபெறும் நிலையில், மே லும், எமது நாட்டை சர்வதேசத்தில் இருந்து தனிமைப் படுத்த வேண்டாம். வாக்கெடுப்பில் பின்னடைவைத் தவிர்த்துக்கொள்ளும் வகையில் அரசாங்கம் செயற்படுவது அவசியம். நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் செயற்படுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும். களனிப் பல்கலைக்கழக மாணவர்கள் மேற் கொண்ட ஆர்ப்பாட்டத்தின் போது அந்த மாணவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலை நியா யப்படுத்தும் வகையில் நிதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ கருத்துக்களை முன்வைத்திருந்தார்.

பல்கலைக்கழக மாணவர்கள் தங்களது கருத்துக் களை வெளியிடுவதற்கான சுதந்திரமும் உரிமையும் வழங்கப்பட வேண்டும். வசந்த முதலிகே தடுத்து வைக்கப்பட்டுள்ள முகாமிலிருந்து அவர் நள்ளிரவில் வௌ;வேறு இடங்களுக்கு அழைத்துச் செல் லப்படுகிறார் என்பது தெரியவந்துள்ளது. இத்தகைய நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும். இளைஞர்கள் குரலுக்கு செவிமடுக்க வேண்டும். – என்றார்.

# பிணைமுறி மோசடியின் முக்கிய சூத்திரதாரியான அர்ஜூனவை அழைத்துவருவதில் என்ன சிக்கல்!

## ஹரினி அமரசூரிய சபையில் கேள்வி



பிணைமுறி ஊழல் மோசடியின் முக்கிய சூத்திரதாரியாகக் குறிப்பிடப்பட்ட மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன மகேந்திரனை நாட்டுக்கு அழைத்து வருவதில் குற்றவாளிகள் பரிமாற்றல் சட்டம் தடையாக உள்ளதா அல்லது வேறு காரணிகள் தடையாக உள்ளனவா என ம க்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய சபையில் கேள்வி எழுப்பினார்.

சபாநாயகர் தலைமையில் இடம்பெற்ற இலங்கை மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு இடையில் குற்றவாளிகளை மீள ஒப்படைத்தல் தொடர்பான சட்டமூலம் மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

பிணைமுறி மோசடியின் முக்கிய சூத்திரதாரி எனக் குறிப்பிடப்பட்ட மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன மகேந்திரனை ஆட்சிக்கு வந்து ஒருசில மாதங்களில் நாட்டுக்கு அழைத்து வந்து,சட்டத்தின் முன் முன்னிலைப்படுத்துவோம் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தேர்தல் காலத்தில் நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங் கியது.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன மகேந்திரனை நாட்டுக்கு அழைத்து வருவதில் சிங்கப்பூர் நாட்டுடனான குற்றவாளிகள் பரிமாற்றல் சட்டம் தடையாக உள்ளதா? அல்லது வேறேதும் காரணிகள் தடையாக உள்ளனவா? இரண்டரை ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் அர்ஜூன மகேந்திரனை நாட்டுக்கு அழைத்து வர எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அரசாங்கம் தனது அரசியல் இருப்பைத் தக்கவைத்துக்கொள்வதற்காக சட்டம் மற்றும் அதனுடனான தாபனங்களைப் பயன்படுத்தி க்கொள்கிறது. பொருளாதார ரீதியில் பாதி க்கப்பட்டுள்ள மக்கள் தாங்கிக் கொள்ள முடியாத நிலையில் தான் வீதிக்கு இறங்கிப் போராட்டத்தில் ஈடுப்படுகிறார்கள்.

மக்கள் போராட்டத்தைத் தடுக்க அரசாங்கம் அதிகாரத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. மக்கள் போராட்டத்தில் ஈடுப்படுகின்றமையால் நாட்டின் நாமம் பாதிக்கப்படாது. மாறாக மக்களின் பிரச் சினைக்கு அரசாங்கம் தீர்வு பெற்றுக்கொடுக்கா விடின் தான் நாட்டின் நாமம் பாதிக்கப்படும். –என்றார்.

# மீண்டும் அதிகரிக்கப்பட்டன தொலைபேசி கட்டணங்கள்!

தொலைபேசி நிறுவனங்கள் நேற்று (புதன்கிழமை) முதல் மீண்டும் தொலைபேசி கட்டணத்தை அதி கரித்துள்ளன. 2.5 சதவீத சமூகப் பாதுகாப்பு வரியை விதிக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கை காரணமாக தொலைபேசி கட்டணத்தை அதிகரிக்க வேண்டி யுள்ளதாக தொலைபேசி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இந்த கட்டண உயர்வு தொடர்பாக சம்பந்தப்பட்ட தொலைபேசி நிறுவனங்கள் விரிவான தகவல்களை வெளியிடவுள்ளன.

# அவரடியைத் தினம்பரவி அவராசி பெற்றிடுவோம்!

(இன்று ஆசிரிய தினம். அதையொட்டி இக்கவிதை பிரசுரமகிறது)

அன்னையும் தந்தையும் காட்டிடுவார் ஆசானை
ஆசானோ அசடகற்றி ஆண்டவனைக் காட்டிடுவார்
அகமிருக்கும் அழுக்கனைத்தும் அகற்றிடுவார் ஆசானும்
அவரடியைத் தினம்பரவி அவராசி பெற்றிடுவோம்

கற்பவற்றைத் தேர்ந்தெடுத்து கருவாக்கி நின்றிடுவார்
கற்றவற்றை மனமமர்த்த கண்ணியமாய் உழைத்திடுவார்
கற்றபடி நடந்துவிட கைகாட்டி ஆகிடுவார்
கற்றுத்தந்த ஆசானின் கழல்பணிந்தி நின்றிடுவோம்

அறவழியில் நடப்பதற்கு அவர்துணையாய் ஆகிடுவார்
புறவழியில் மனமதனைப் போகாமல் செய்திடுவார்
துணிவுடனே நடப்பதற்கு துணையாக அமைந்திடுவார்
அவனிதனில் ஆசானின் ஆசியினைப் பெற்றிடுவோம்

ஏணியாய் இருந்து எமையேற்றி விட்டிடுவார்
ஞானியாய் மலர்ந்து நல்லுரைகள் நவின்றிடுவார்
ஈனமாம் நினைப்பை இல்லாமல் செய்திடுவார்
எல்லோரும் குருவினது திருவடியைப் பணிவோமே

தோழமை உணர்வுடனே தொட்டுமே அனைத்திடுவார்
ஆழமாம் உரிமையுடன் அவரெம்மைக் கடிந்திடுவார்
கோழையெனும் நினைப்பதனைக் குழியிட்டுப் புதையென்பார்
குவலயத்தில் ஆசானைக் கொண்டாடி மகிழ்வோமே

வாய்மைதனை மனமிருத்தி வாழுவென்று உரைத்திடுவார்
கீழ்மைதனை மனமிருந்து கிழித்தெறிந்து விடுவென்பார்
தாய்மையுடன் அனைவரையும் தழுவியே நடவென்பார்
தரணியிலே ஆசாற்கு தலைவணங்கி நிற்போமே

ஆசானின் அறிவுரைகள் அத்தனையும் பொக்கிமே
அவரன்பைப் பெறுவதுவே அனைவர்க்கும் முக்கியமே
அகிலமதில் ஆண்டவனாய்க் காட்சிதரும் ஆசானை
அனைவருமே அடிபரவி அகநிறைவு பெறுவோமே

- மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா -
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,

# யாழ். மாநகர சபைக்கு இரண்டு கோடி ரூபா பெறுமதியான தீயணைப்பு வாகனம் அன்பளிப்பு!

நொதேர்ன் தனியார் வைத்தியசாலை ஸ்தாபகர் எஸ்.பி.சாமியால், யாழ்.மாநகர சபைக்கு இரண்டு கோடி ரூபா பெறுமதியான தீயணைப்பு வாகனம் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டது. தீயணைப்பு வாகனத்தை உத்தியோகபூர்வமாக வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று (புதன்கிழமை) நொதேர்ன் தனியார் வைத்தியசாலையில் இடம்பெற்றது.

கடந்த 2020 ஆம் ஆண்டு யாழ். மாநகர சபைக்கு சொந்தமான தீயணைப்புப் படை வாகனம் விபத்தில் முற்றாக சேதமடைந்திருந்த நிலையில் யாழ்.வணிகர் கழகத்தின் ஒருங் கிணைப்பில் நொதேர்ன் தனியார் வைத்திய சாலை ஸ்தாபகர் எஸ்.பி.சாமி யால் இந்த வாக னம் யாழ்.மாநகர சபைக்கு கைய ளிக்கப்பட்டது.

கையளிப்பு நிகழ்வைத் தொடர்ந்து, வீரர்களால் பரிசோதித்து பார்க்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நொதேர்ன் தனியார் வைத்தியசாலை நிர்வாகத்தினர், யாழ் மாநகர முதல்வர், யாழ்ப்பாண மாவட்ட செயலர், யாழ். மாநகர ஆணையாளர், யாழ் மாநகரசபை உறுப் பினர்கள் மற்றும் யாழ் வணிகர் கழக பிரதிநிதி கள், தீயணைப்பு படை பிரிவு உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## 22ஆவது.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்கள் கூட்டத்தில் இந்த முடிவு மாற்றப்பட்டது. அடுத்த நாடாளுமன்ற அமர்வு எதிர்வரும் 18 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

இதேவேளை, 22 ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் எதிர்க்கட்சிகளின் இறுதி நிலைப்பாடு குறித்து ஆராய்ந்து விரைவில் தமக்கு அறிவிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசமைப்பின் 22 ஆவது திருத்தம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் பல சந்தர்ப்பங்களில் முரண்பாடான நிலைப்பாட்டை எடுத்து வரும் நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

22 ஆவது திருத்தம் தொடர்பில் ஆளும்தரப்பில்இருந்துஎதிர்க்கட்சிக்குச் சென்ற குழு ஒரு கருத்தையும், எதிர்க் கட்சித் தலைவர் உள்ளிட்ட ஏனைய கட்சிகள் மற்றொரு கருத்தையும் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளன.

22 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் முதன் முதலில் எடுத்துள்ள நிலைப்பாட்டுக்கு முற்றிலும் மாற்றமான நிலைப்பாட்டை எடுத்துள்ள நிலையில் இது தொடர்பில் ஜனாதிபதிக்குத் தொடர்ச்சியாக சுட்டிக் காட்டப்பட்டது.

இந்தநிலையிலே, பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கு ஜனாதிபதி மேற்கண்டவாறு அறிவித்துள்ளார் என்று ஜனாதிபதி அலுவலக வட் டாரங்கள் தெரிவிக்கின்றன.

## மின்னல்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை இடி மின்னலுடன் மழை பெய்தது. இதன்போது தனது தோட்டத்தில் நின்று பணியாற்றியவரை இடி மின்னல் தாக்கியுள்ளது.

அவர் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு அவசரமாகக் கொண்டு செல்லப்பட்ட போதும் அவரை வைத்தியர் பரிசோதித்த வேளை அவர் ஏற்கனவே உயிரிழந்திருந்தமை உறுதி செய்யப்பட்டது.

உயிரிழந்தவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக தெல்லிப்பழை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## யாழ்.பல்கலையில்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் இன்று காலை ஆரம்பமாகியுள்ளது. இன்று முதல் எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை வரை மூன்று நாள்களில் எட்டு அமர்வுகளாக இடம்பெறவுள்ள இந்தப் பட்டமளிப்பு விழாவில் 2 ஆயிரத்து 378 பேர் பட்டங்களையும் தகைமைச் சான்றிதழ்களையும் பெற்றுக்கொள்கின்றனர்.

## தந்தையும்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கார் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் வந்த இனந்தெரியாத நபர்கள் வீட்டுக்குள் பிரவேசித்து துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்என்றுவிசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ரி – 56 ரக துப்பாக்கியால் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த மூவரும், கொலைச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியிலில் இருந்து விடுவிக்கப்பட்டவர்கள் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இரண்டு தரப்பினருக்கு இடையில் நீண்ட காலம் நிலவி வந்த முரண்பாடு காரணமாக இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்காகக் கம்பஹா பொலிஸ் அத்தியட்சகரின் தலைமையில் பல குழுக்கள் விசாரணைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## கோண்டாவிலில்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விபத்தில் உயிரிழந்தவர் அடையாளம் காணப்படாத நிலையில் கோப் பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தற்கொலை என்று சந்தேகிக்கப்படுவதுடன், உயிரிழந்தவர் 30 வயது மதிக்கத்தக்கவர் என ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

## மொட்டுக் கட்சி.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவருக்கான வாக்கெடுப்பு இடம்பெற்றது.

அதற்கமைய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பின் ரஞ்சித் பண்டாரவுக்கு ஆதரவாக 15 வாக்குகளும், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்னவுக்கு ஆதரவாக 7 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

கோப் குழுவின் முந்தைய தலைவராகப் பேராசிரியர் சரித ஹேரத் செயற்பட்டு வந்தார்.

எவ்வாறாயினும், இம்முறை தெரிவு செய்யப்பட்டுள்ள கோப் குழுவுக்கு அவர் தெரிவு செய்யப்படவில்லை.

இந்தநிலையில், கோப் குழுவிலிருந்து விலகவுள்ளதாக கலாநிதி ஹர் டி சில்வா தெரிவித்துள்ளதமையை அடுத்து அந்த வெற்றிடத்துக்குத் தாம் சரித்த ஹேரத்தை பரிந்துரைப்பதாக எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

இதேவேளை, அரச கணக்குகள் பற்றிய கோபா குழுவின் தலைவராக எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கபீர்ஹாசீம்நியமிக்கப்பட்டுள்ளார்.

அரச கணக்குகள் தொடர்பான குழு நேற்று நாடாளுமன்றில் முதல் தடவையாக கூடியது.

இதன்போது ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் ஏகமனதாக கோபா குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் ஆலோசனைக்கு அமைவாக கபீர் ஹாசீம் கோபா குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

# பால் தேநீர், தேநீரின் விலைகளும் குறைப்பு!

பால் தேநீர் மற்றும் தேநீரின் விலைகளை குறைக்க தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி பால் தேநீரின் விலையை 20 ரூபாவால் குறைத்து 100 ரூபாவாக விற் பதற்கும், தேநீரின் விலையை 20 ரூபாவால் குறைத்து 30 ரூபாவாக விற்பதற்கும் அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது. இந்த விலைக்குறைப்பு இன்று முதல் அமுல்படுத்தப்படவுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முரண்பாடுகளை மறந்து.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான நான்கு கட்ட மூலோபாயத் திட்டத்தை அறிமுகப்படுத்திய ஜனாதிபதி, முதல் கட்டம் வெற்றியடைந்துள்ளது எனவும், இரண்டாவது கட்டத்துக்கான அடித்தளம் தயாராகி வருகின்றது எனவும் தெரிவித்தார். தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பில் இன்று நாடாளுமன் றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, விசேட உரையொன்றை நிகழ்த்தினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜப்பான் – பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கான விஜயம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, கடன் மறுசீரமைப்புப் பணிகளில் மத்தியஸ்தராக ஜப்பான் முன்னணி வகிக்க உடன்பட்டிருப்பது நல்லதொரு அறிகுறி எனவும், கடன் வழங்கிய நாடுகளின் மாநாட்டின் இணைத் தலைமை பொறுப்பை ஜப்பானுக்கு வழங்குமாறு கோரிக்கை விடுப்பதாகவும் இதன்போது குறிப்பிட்டார்.

கடன் வழங்கியுள்ள இந்தியா, சீனா, ஜப்பான் உள்ளிட்ட முக்கிய நாடுகளுடனும், ஏனைய கடன் வழங்குநர்களுடனும் நடத்தப்படும் பேச்சுகளின் முன்னேற்றம் தொடர்பிலும் மிக விரைவில் அவர்களுடன் பலதரப்பு இணக்கப்பாட்டை எட்டுவது குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

அத்துடன், சிங்கப்பூர் பிரதமர் லீ ஜென் லோனுடன் நடைபெற்ற பேச்சு தொடர்பில் நாடாளுமன்றத்தில் விளக்கமளித்த ஜனாதிபதி, கடந்த காலத்தில் கைவிடப்பட்ட சிங்கப்பூர் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை மீண்டும் புத்துயிர் பெறச் செய்ய வேண்டும் எனவும் இங்கு குறிப்பிட்டார்.

அதன் ஊடாக சிங்கப்பூருடன் நிலையான பொருளாதார அணுகுமுறையை ஏற்படுத்துவதன்வாய்ப்புதொடர்பாகவும், தென்கிழக்காசியாவுடனான நாட்டின் பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவதற்கான சாத்தியக்கூறு பற்றியும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

விவசாயத்துறை தொடர்பில் துரிதமாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களால் கடந்த போகத்தில் எதிர்பார்த்ததை விட அதிக அறுவடையைப் பெற முடிந்தது எனவும், அடுத்த பெரும் போகத்தை எவ்வித தடையுமின்றி வெற்றிகரமாக மேற்கொள்வதற்குத் தேவையான விதைநெல் மற்றும் உரங்கள் என்பன தயார்ப்படுத்தப்பட்டுள்ளது எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக துரித உணவு உற்பத்தி வேலைத்திட்டம்ஒன்றுதயாரிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, பொருளாதார நெருக்கடி மற்றும் பணவீக்கத்தைத் தடுக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

பொருளாதார நெருக்கடிகளைத் தீர்க்கத் தேவையான எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் விளக்கினார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்–
076 443 8622




இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.10.2022இல் வெளியிடப்பெற்றது.